முச்சந்தி முரளி




"ஓயாத தேர்தல் தொல்லையால சனங்கள் எல்லாம் துலையப்போகுதுகள் பாருங்கோ"


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 313

வெள்ளிக்கிழமை
04 ஒக்ரோபர் 2024

புரட்டாதி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


### நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர்

# உள்ளூராட்சித் தேர்தல் உடனடியாக நடக்கும்!

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 4

நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் தேர்தல்கள் ஆணைக்குழு இயன்றளவு விரைவாக உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு நாள் குறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.


11


## வேட்புமனுக்கள் இன்றுமுதல் ஏற்பு

கொழும்பு, ஒக். 4

நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று முதல் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.


11


## 8 சுயேச்சைக் குழுக்கள் யாழில் கட்டுப்பணம்!

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை எட்டு சுயேச்சைக் குழுக்கள் இதுவரை செலுத்தியுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் பதில் மாவட்டச் செயலருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (அ-ம-20)

## ஊழல் ஒழிப்பு: ஐ.நா. பாராட்டு


விரிவு :- பக். 11


## கிராம அலுவலரை இடமாற்ற வேண்டாம்

### வரணி – நாவற்காடு மக்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 4

கிராம அலுவலரை இடமாற்ற வேண்டாமெனக் கோரி, யாழ்ப்பாணம் - வரணி, நாவற்காடுப் பகுதி மக்கள் நேற்று வியாழக் கிழமை போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

நாவற்காடுப் பகுதிக் கிராம அலுவலராக கந்தசாமி தர்மேந்திரா என்பவர் நியமனம் பெற்று ஆறு மாதங்கள்


11


## இந்திய மீனவர்களை உடன் விடுவியுங்கள்

### இலங்கை அரசுக்கு எதிராக தமிழகத்தில் நேற்றுப் போர்

சென்னை, ஒக். 4

இலங்கைச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி, தமிழகத்தில் நேற்று உணவுத் தவிர்ப்புப் போராட்டம்


11


## ஏப்ரல் மாதம் வரை எரிபொருள் இருப்பு!

கொழும்பு, ஒக். 4

ஏப்ரல் மாதம் வரையில் எரிபொருள் கையிருப்பில் உள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.


11


## விசுவமடுவில் விபத்து; ஒருவர் பரிதாபச் சாவு

கிளிநொச்சி, ஒக். 4

விசுவமடு - கண்ணகிநகர் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


11


## சங்குவேலி வழிப்பறி: மூவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாணம் - சங்குவேலியில் தனது காணியை விற்றுக் கிடைத்த ஒரு கோடியே 5 இலட்சம் ரூபா பணத்துடன் வீடு திரும்பிக் கொண்டிருந்த நபரைத் தாக்கிவிட்டுப்


11


## மேற்குலகத்தின் பாதுகாப்பை எதிர்பார்த்தாராம் பிரபாகரன்

### வீரசேகர கண்டுபிடிப்பு



கொழும்பு, ஒக். 4

மேற்குலகம் தன்னைப் பாதுகாத்து வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லும் என புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் கடைசிநொடிவரை நம்பிக்கொண்டிருந்தார் எனத் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரத் வீரசேகர.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-


11


## வெளிநாட்டு சிகரெட்கள்: மன்னாரில் பெண் கைது!

மன்னார், ஒக்.4

வெளிநாட்டு சிகரெட்களுடன் மன்னாரில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


11



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைத் திணைக்களத்தை மறுசீரமைக்கவேண்டும்

## ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 4**

**பரீட்சை வினாத்தாள்கள் மோசடியைத் தடுக்கும் முகமாக பரீட்சைத் திணைக்களத்தின் முழுமையான மறுசீரமைப்பு இன்றியமையாதது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

இந்த ஆண்டுக்கான தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாள் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல் நிலை தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2024 ஆம் ஆண்டு பரீட்சைகள் சம்பந்தமான மோசடிகளில் ஈடுபட்ட 473 பேரின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அவர்கள் எந்தவொரு பரீட்சைகளின் போதும் பணியாற்றத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில், பிரதேச பணிப்பாளர் நாயகம் மற்றும் மூத்த அதிகாரிகளின் பெயர்களும் அடங்குகின்றன.

அதேவேளை, 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் முன்கூட்டியே வெளியிடப்பட்டதா? என்பது தொடர்பில் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எனவே, தற்போதைய சூழ்நிலையில், பரீட்சைகள் திணைக்களத்தை முழுமையாக மாற்றி அமைக்கவேண்டியது அவசியம்- என்றார். (ச)

# சமஷ்டி ஆட்சி இடமளியோம்

## கூறுகிறார் ரொஷான்

கொழும்பு, ஒக். 4

நாட்டின் நலனுக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னெடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்குவோம். ஆனால் நாட்டை பிளவுபடுத்தும் சமஷ்டியாட்சி முறைமை உருவாக்கத்துக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என திலித் ஜயவீர தலைமையிலான தாயக மக்கள் கட்சியின் தலைவர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிக்கு எதிராகக் குரல் கொடுத்ததால் எமது அரசாங்கத்தில் இருந்து நான் வெளியேற்றப்பட்டேன். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாட்டுக்காக எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடனத்தில் சமஷ்டியாட்சி அரசமைப்பு முறைமையை உருவாக்குவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். நாட்டின் ஒற்றையாட்சி பாதுகாக்கப்படவேண்டும் - என்றார். (ச-இ)

# மைத்திரியின் மகன் திலித்துடன் இணைவு

கொழும்பு, ஒக்.4

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேன, திலித் ஜயவீர தலைமையிலான மௌபிம ஜனதா கட்சியில் இணைந்துள்ளார்.

அவருக்கு மௌபிம ஜனதாக் கட்சியின் பொலநறுவை மாவட்ட அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மேற்படி கட்சி சார்பில் பொலநறுவை மாவட்டத்தில் மைத்திரியின் மகன் போட்டியிடவுள்ளார். (ச-44)

# சபாநாயகருக்கு பிரியாவிடை

கொழும்பு, ஒக்.4

நாடாளுமன்ற அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தீர்மானித்துள்ளார்.

அதற்கமைய இம்முறை பொதுத்தேர்தலில் அவர் போட்டியிடமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

9 ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக பதவி வகித்த மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கான பிரியாவிடை நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது எனத் தெரியவருகின்றது.

1983 இடைத்தேர்தல் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நாடாளுமன்றம் வந்த அவர், 1987 இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு எதிராக வாக்களித்ததால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

2000 ஆம் ஆண்டு முதல் 2024 வரை அவர் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார். கடைசியாக மொட்டுக்கட்சி சார்பில் மாத்தறை மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றம் தெரிவானார். (ச-44)

# அமைச்சின் நிதியில் வெளிநாட்டு 'விசிட்'

## பனை அபிவிருத்திச்சபை முன்னாள் தலைவருக்கு 'செக்'

கொழும்பு, ஒக்.4

பிரான்ஸ் நாட்டுக்குச் செல்வதற்காக அமைச்சுக்குச் சொந்தமான நிதியிலிருந்து 19 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் செலவிட்டமை தொடர்பில் உடனடி விசாரணை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவர் தனது இராஜினாமா கடிதத்தை அமைச்சின் செயலாளரிடம் நேற்றுமுன்தினம் கையளித்துள்ளார்.

குறித்த அதிகாரி கடந்த 2020 ஆம் ஆண்டு பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார், அவர் நாட்டின் பனை உற்பத்திகளை பிரபலப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு 2021 செப்ரெம்பர் 4 முதல் 27 ஆம் திகதி வரை பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருந்தார்.

இந்த 23 நாள் பயணத்துக்காக பனை அபிவிருத்திச் சபை 19 இலட்சத்து 49 ஆயிரத்து 450 ரூபாவைச் செலவிட்டுள்ளது.

எனினும், 2021ஆம் ஆண்டு மற்றும் ஏப்ரல் 2022ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஐரோப்பிய நாடுகளுக்கு பனைப் பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் கிடைத்த வருமானம் பூஜ்ஜியமே எனத் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் அவர் செலவழித்த தொகையை அவரிடமிருந்து திரும்பப் பெறுவதற்குரிய விசாரணையை ஆரம்பிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. (ச-சி)

# பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தவேண்டும்

## பெண் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறு கோரிக்கை விடுத்துள்ள பெண் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் 25 வீத பெண்களின் உரிமையை உறுதிப்படுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் கடந்த காலத்தில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்டோம். ஆனால், ஒற்றுமையின்மை காரணமாக தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையானது அரைவாசிக்கு மேல் குறைந்துள்ளது. கட்சிகள் பேச்சளவிலேயே பெண்களின் பிரதிநிதித்துவம் குறித்துப் பேசுகின்றனர். உளரீதியாக அவர்கள் பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை வழங்குவதை உறுதிப்படுத்துவதில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச)



# கடந்த நாடாளுமன்றால் 167 சட்டங்கள்

கொழும்பு, ஒக்.4

2020 ஒகஸ்ட் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, 2024.செப்ரெம்பர் 24 ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்ட ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் காலப்பகுதியில் 167 சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டு 7அரசாங்க சட்டங்களும், 2021 ஆம் ஆண்டு 30 அரசாங்க சட்டங்களும், 2022 ஆம் ஆண்டு 44 அரசாங்க சட்டங்களும் 2 தனியாள் உறுப்பினர் சட்டங்களும், 2023 ஆம் ஆண்டு 29 அரசாங்க சட்டங்களும், 05 தனியாள் உறுப்பினர் சட்டங்களும், 2024 ஆம் ஆண்டு 36 அரசாங்க சட்டங்களும், 21 தனியாள் சட்டங்களும் இக்காலப்பகுதியில் இயற்றப்பட்டுள்ளன. இதற்கமைய 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டம், 2023 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்ட அலுவலக சட்டம், 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம், 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி சட்டம், 2023 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 2023 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு (திருத்தம்) சட்டம், 2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டம், 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டம், 2024ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டம், 2024 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பொருளாதார நிலைமாற்ற சட்டம் உள்ளிட்டவை 9 ஆவது நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட குறிப்பிடத்தக்க சட்டங்களாகும். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போதைப்பொருளிலிருந்து இளையோரை மீட்போம்!

## சங்கானையில் கவனவீர்ப்பு

**கொழும்பு, ஒக். 4**

**சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரின் ஏற்பாட்டில் போதைக்கு எதிரான கவனயீர்ப்பு போராட்டம் சங்கானை பேருந்து தரிப்பு நிலையத்துக்கு முன்பாக நேற்று நடைபெற்றது.**

சங்கானையில் புதிதாக ஒரு மதுபானசாலை அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. குடிமனைகள் காணப்படும் இடத்தில் மதுபானசாலைக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று இந்தப் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'மதுசார விலைகளை குறைத்து எமது சமூகத்தை அழிக்கவேண்டாம்', 'போதையற்ற வாழ்வே ஆரோக்கியத்துக்கான வழி', 'எமது சமூகத்தை அழிக்கும் மது எமக்கு தேவை தானா?', 'முடவனாக விரும்பும் மானிடனே மதுவை கையில் எடுக்காதே', 'இளைய சமூகமே மதுவை உங்கள் கைகளில் எடுக்காதீர்', 'சிறுவர்களையும் மகளிரையும் மதுவுக்கு அடிமைப்படுத்தாதே' என கோஷமிட்டு, பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் முடிவில் சங்கானைப் பிரதேச செயலர் திருமதி. கவிதா உதயகுமார் ஊடாக ஜனாதிபதிக்கு மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. (ச-27-66)





# வவுனியா ஈச்சங்குளத்தில் யானைகள் அட்டகாசம்!

யாழ்ப்பாணம், ஒக்.4

வவுனியா ஈச்சங்குளத்தில் காட்டு யானைகளினால் ஒரே இரவில் பெருந்தொகையான தென்னை மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. குறித்த அனர்த்தமானது நேற்று இரவு இடம்பெற்றுள்ளது. வறட்சிநிலையிலும் தென்னையை பயிரிட்டு வளர்ந்திருந்த நிலையில் யானைகள் புகுந்து நாசம் செய்தமையால் தமது வாழ்வாதாரம் இழக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். இதற்கான சரியான தீர்வை அதிகாரிகள் பெற்றுத்தருமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-110)

# காணிகளை விடுவியுங்கள்

முல்லைத்தீவு, ஒக். 4

காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேப்பாபிலவு மக்கள் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கேப்பாபிலவு மக்கள் தங்கள் சொந்த காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டம் நடத்தி ஒரு பகுதி காணிகள் விடுவிக்கப்பட்ட போதும் இன்னும்74 குடும்பங்களுக்குச் சொந்தமான 59.5 ஏக்கர் காணிகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றன.

எங்களின் புது ஜனாதிபதியான அநுரகுமார திஸாநாயக்க பல நல்ல விடயங்களைச் செய்கின்றார். ஜனாதிபதித் தேர்தலுடன் உங்கள் விடயங்கள் முடியவில்லை. கேப்பாபிலவு மக்களின் காணிகளை நீங்கள் விடுவித்து தந்தால் நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெறவைப்போம், என்று தெரிவித்துள்ளனர். (ஒ-19)

# ஆசிரியர் பழிவாங்குவதாக மாணவன் முறைப்பாடு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கோட்டைகட்டியகுளம் மகாவித்தியாலத்தில் கற்பிக்கும் ஆசிரியரால் பழிவாங்கப்பட்டுள்ளதாக, பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் வடமாகாண ஆளுநர் ஆகியோரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். கடந்த ஆண்டு மாகாண மற்றும் தேசிய மட்ட எறிபந்தாட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவனை, இம்முறை அணிக்கு இணைத்துக்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அவருக்குப் பதிலாக, பாடசாலையிலிருந்து ஓராண்டு காலம் இடைவிலகியிருந்த ஒருவர் இணைக்கப்பட்டுள்ளார். 13ஆண்டுகளாக மேற்படி பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரே தனிப்பட்ட பழிவாங்கல் காரணமாக இதைச் செய்துள்ளார் என்று குறிப்பிட்டே பெற்றோர் முறையிட்டுள்ளனர். (ஒ-19)

# அச்சுறுத்தியவரை கைது செய்யுங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.4

காணாமலாக்கப்பட்டோரைத் தேடி உறவுகள் கடந்த முதலாம் திகதி நடத்திய ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை தவறாக விமர்சித்து போராட்டக்காரரை அச்சுறுத்திய நபரை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் நிறுத்தவேண்டும் என அடக்குமுறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பு தெரிவித்துள்ளது. அப்பாவி தமிழ் மக்கள் மீது காடையர்களை ஏவி விட்டு மிரட்ட முனையும் நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.


இந்த அடக்குமுறைகளை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25-27)




**பொன்னை விடவும் நேரத்துக்குப் பெறுமதி கூட. ஆனால் அந்தப் பெறுமதி தெரியாமல் நேரத்தை மதிக்காமல் ஒருசிலர் செய்யிற வேலையால் எல்லாருமே கஷ்டப்படுறதும் உண்டு. அதிலையும் உந்த பஸ்காரர் நேரத்தை வைச்சுக் காட்டுற விளையாட்டு சொல்லிமாளாது. யாழ்ப்பாணம்- பருத்தித்துறை டிப்போவில இருந்து விடியக் காலமை பள்ளிக்கூட சேர்விஸுக்கு எண்டு ஒரு சீ.ரி.பி. பஸ் வாறது. கல்லுவத்தில இருந்து அப்பிடியே குஞ்சர்கடைக்கு போய் அதால கரணவாய், இரும்பு மதவடி, வதிரிச் சந்தி , பருத்தித்துறை எண்டு போய் கடைசியா மெதடிஸ் பள்ளிக்கூடத்தில நிக்கும். வடமராட்சியில இருக்கிற பெரிய பள்ளிக்கூடங்களுக்கு போற பிள்ளையள் இந்த ஒரேயொரு பஸ்ஸை மட்டும் தான் நம்பியிருக்கினம். ஆனால் நம்பினோரைக் கைவிடுறதைத்தான் அந்த நேரத்துக்கு வாற சீ.ரி.பி.பஸ் செய்து கொண்டிருக்கு.**

**உதாரணமா குஞ்சர்கடைச் சந்திக்குக் காலமை 6.45 க்குத்தான் அந்த பஸ் வரவேணும். அதால பிள்ளையள் 6.30 க்கே போய் பின்னுக்கு புத்தகப்பைச் சுமையோட நிப்பினம். ஆனால் அந்த பஸ் அநேகமா 6.50 க்கு பிறகுதான் அந்த இடத்துக்கு வரும். கிட்டத்தட்ட 20 நிமிசத்துக்கு மேல பிள்ளையள் கால்கடுக்க அதில ஏமலாந்திக் கொண்டு நிக்கோணும். இன்னும் சில நாள்களில 7.15 க்கு பிறகும் அந்த பஸ் வந்து, அதில போன பிள்ளையள் பள்ளிக்கூடத்துக்கு லேட் எண்டு அடி வாங்கின கதையும் இருக்கு. சரி, எப்பிடியும் அந்த பஸ் லேட்டாத்தானே வருமெண்டு கொஞ்சம் ஆடிஅசைஞ்சு போனால், அண்டைக்கெண்டு அந்த பஸ் 6.20 க்கே அந்த இடத்துக்கு வந்துபோயிருக்கும். இப்பிடி பிள்ளையள் முந்திப்போனால் பஸ் பிந்தி வாறதும், பிந்திப்போனால் பஸ் முந்திப்போறதுமா ஒரே ஒளிச்சுப்பிடிச்சு விளையாட்டுநடந்துகொண்டிருக்கு. ஒருநாளும் அந்த பஸ் சொன்னநேரத்துக்கு வாறேலை எண்டதுதான் முக்கியமான விசயம்.**

**இப்பிடி முந்திப் பிந்தி வாறதால பெற்றார் தான் கடுமையாக் கஷ்டப்படுகினம். பஸ் முதலே போட்டுதெண்டால், பிறகு அவை தான் அரக்கப்பரக்க பிள்ளையளை பருத்தித்துறை மட்டும் கொண்டு போகோணும். அப்பிடி உடன பிள்ளையை ஏத்திக் கொண்டு போற வசதி எல்லாப் பெற்றாருக்கும் இல்லையெண்டதால,சில பிள்ளையள் இப்பிடி பஸ் விளையாட்டுக்காட்டுற நாள்களில பள்ளிக்கூடம் போகாமல் வீட்டை நிக்கவேண்டியும் இருக்கு. "கொழும்பு லைனுக்கு போட்டு வாற பஸ்களை அப்பிடியே இந்த சேர்விஸிக்கு விடுறதாலதான் இப்பிடிச் சிலவேளை நேரம் முந்திப்பிந்தி பஸ் வருகுது போல. இனிமேல் சரியான ரைம் பஸ் போகும்" எண்டு பருத்தித்துறை டிப்போக்காரர் சொல்லுகினம். பாப்பம் சொன்ன சொல்லைக் காப்பாத்தி, பிள்ளையளை இனியாவது ஒழுங்கா ஏத்தி இறக்குகினமோ எண்டு.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மக்களுக்கு வலுவூட்டும் நோக்குடன் காப்புறுதி விழிப்புணர்வு மாதம் ஆரம்பம்

செப்டெம்பர் 1 ஆம் திகதியன்று கொண்டாடப்படுகின்ற 8வது தேசிய காப்புறுதி தின கொண்டாட்டத்தையொட்டியதாக, செப்டெம்பர் 1 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை காப்புறுதி விழிப்புணர்வு மாதம் 2024 என்பதை ஆரம்பிக்கின்றமை குறித்து இலங்கை காப்புறுதிச் சங்கம் பெருமையுடன் அறிவித்துள்ளது. "வாழ்வுக்கு வலுவூட்டுவதல், எமது தேசத்திற்கு உரமூட்டுதல்" (Empowering Lives, Strengthening Our Nation) என்ற தொனிப்பொருளில் இந்த ஆண்டில் முன்னெடுக்கப்படுவதுடன், நாடெங்கிலும் தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் வணிகங்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதில் காப்புறுதி வகிக்கின்ற முக்கிய பங்கு குறித்து வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. மக்கள் தமது ஆரோக்கியம், ஆயுள் மற்றும் சொத்து ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கு காப்புறுதித் திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டியதன் தேவை குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டுவதே ஒரு மாத காலமாக இடம்பெறவுள்ள இந்த முயற்சியின் அடிப்படை நோக்கம். இதனை முன்னெடுப்பதன் மூலமாக, தேசத்தின் பொருளாதார நெகிழ்திறனை மேம்படுத்தி, எதிர்பாராமல் எழக்கூடிய எந்தவொரு சவாலுக்கும் முகங்கொடுப்பதற்கு தனிநபர்களும், வணிகங்களும் தயாராக உள்ளதை உறுதிப்படுத்துவதை இப்பிரச்சாரம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையில் மக்களைப் போலவே காப்புறுதித் தொழில் துறையும் அண்மைக்காலங்களில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. பணவீக்கம், வரி அதிகரிப்பு மற்றும் அதிக வாழ்க்கைச்செலவு ஆகியவற்றால் பொருளாதாரம் பாதிக்கப்பட்ட காலகட்டத்திலும், காப்புறுதியினூடாக இலங்கை மக்களுக்கு வலுவூட்டி, பொருளாதார ஸ்திரத்தன்மையில் வலுவான தூணாக நிற்பதில் இத்தொழில்துறை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளது. இலங்கை காப்புறுதித் துறையின் நெகிழ்திறன் மற்றும் சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் வல்லமை ஆகிய மேற்குறிப்பிட்ட சவால்களை வாய்ப்புக்களாக மாற்றுவதற்கு வித்திட்டுள்ளன. மருத்துவச் செலவுகள், மருந்து விலைகள் மற்றும் பொதுவான பணவீக்கம் ஆகியன அதிகரித்துள்ள நிலையில், ஸ்திரத்தன்மையையும், உத்தரவாதத்தையும் காப்புறுதி வழங்குவதுடன், மக்களை தற்போதைய வாழ்விலும், எதிர்காலத்தில் எதிர்பாராமல் எழக்கூடிய நிலைமைக்கு எதிராகவும் பாதுகாப்பினை வழங்குகின்றது.

மிக வேகமாக மாற்றம் கண்டு வருகின்ற டிஜிட்டல் துறையில், தனது வாடிக்கையாளர்களின் மாற்றம் கண்டு வருகின்ற தேவைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை காப்புறுதித் தொழில்துறை சூழ்நிலைக்கேற்ப தொடர்ச்சியாக தன்னை மாற்றி வருகின்றது. செயற்கை நுண்ணறிவு, கணினி ஆற்றல், கணினி கணினி சேவைகள் உட்பட, டிஜிட்டல்மயமாக்கத்தில் ஏற்பட்டுள்ள மேம்பாடுகளுடன், இத்தொழில்துறை தனது சேவை வழங்கல்களை மேம்படுத்தி, காப்புறுத் தீர்வுகளை மேலும் அணுகப்படக்கூடியவையாகவும், பயனர்நேயம் மிக்கதாகவும் ஆக்குகின்றன. டிஜிற்றல் கொடுப்பனவு நுழைமுகங்கள், வாடிக்கையாளர் செயலிகள் மற்றும் இணையவழியில் செயல்பாடுகளை உள்வாங்கும் ஒருங்கிணைந்த நடைமுறை ஆகியவற்றின் அறிமுகம், காப்புறுதிதாரர்களுக்கு மகத்தான அளவில் சௌகரியம் மற்றும் திறன் மிக்க சேவையை வழங்க, தொழில்நுட்பத்தின் அனுகூலத்தை தொழில்துறை எவ்வாறு பயன்படுத்திக்கொள்கின்றது என்பதற்கு சில உதாரணங்களாகும்.

மிகவும் ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட ஒரு துறை என்ற ரீதியில், வாடிக்கையாளருக்கு பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வலுவான கட்டமைப்பை காப்புறுதித் துறை இலங்கையில் வழங்குகின்றது. ஒழுங்குமுறை அதிகாரத்தின் ஒத்துழைப்புடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காப்புறுதி குறைகேள் அதிகாரியின் சேவை நுகர்வோருக்கும், நிறுவனங்களுக்கும் குறைகளுக்கு தீர்வு கிடைப்பதற்கான தளத்தை வழங்குகின்றமை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் தொழிற்துறை கொண்டுள்ள அர்ப்பணிப்பை மீளவும் வலியுறுத்துகின்றது. மேலும், நிதியியல் சொத்துக்களைப் பாதுகாப்பது மட்டுமன்றி, கடந்த காலங்களில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புக்களைத் தோற்றுவித்து, நாட்டின் பொருளாதாரத்திற்கு இத்தொழிற்துறை முக்கிய பங்காற்றி வருகின்றது. 2022 ஆம் ஆண்டில் 63,000 க்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புக்களை வழங்கியுள்ள காப்புறுதித் தொழில்துறை, மறைமுகமாக 63,000 குடும்பங்களுக்கு பயனளித்துள்ளது. இளைஞர், யுவதிகள் மற்றும் பெண்கள் தம்மை காப்புறுதி தொழில் தகைமையாளர்களாக மாற்றிக் கொள்வதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தி, அவர்களுக்கு வலுவூட்டுவதிலும் இத்தொழில்துறை முக்கிய பங்காற்றி வருகின்றது.

1989 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை காப்புறுதிச் சங்கம் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து 28 காப்புறுதி நிறுவனங்களையும் உள்ளடக்கியுள்ளதுடன், கூட்டு நலன்கள் மற்றும் சவால்களுக்கு தீர்வு காண்பதற்கு ஒத்துழைக்கும் தளமாக, காப்புறுதி நிறுவனங்களை ஐக்கியப்படுத்தும் நோக்கத்துடன் இயங்கி வருகின்றது. அனைவருக்கும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி, விரிவான காப்புறுதித் திட்டத்துடன் இலங்கை மக்கள் பாதுகாக்கும் அதன் அர்ப்பணிப்பே இதன் இலக்கின் மையமாக உள்ளது.

அந்த வகையில், காப்புறுதி விழிப்புணர்வு மாதம் 2024 ஆனது காப்புறுதியின் முக்கிய பங்கு குறித்து மக்கள் ஆழமான அறிவைப் பெற்றுவதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள பல்வேறுபட்ட தளங்கள் மற்றும் பல்வேறுபட்ட மார்க்கங்களில் நிகழ்வுகள் மற்றும் பிரச்சாரங்களுடன் தொடர் நிகழ்வுகளில் இலங்கை காப்புறுதிச் சங்கம் ஈடுபட்டு, அறிவை வளர்க்கும் முயற்சிகளை முன்னெடுக்கும். காப்புறுதித் துறை தொடர்ந்தும் புத்தாக்கத்திற்கு உள்ளாகி, பரிமாண மாற்றம் கண்டு வருகின்ற நிலையில், தொழில்துறையில் ஒத்துழைப்பிற்கு அணுசரணையளித்து, இலங்கை மக்களுக்கு வலுவூட்டும் தனது இலக்கில் இலங்கை காப்புறுதிச் சங்கம் தொடர்ந்தும் உறுதிப்பாட்டுடன் உள்ளது.

SLIC
Sri Lanka Insurance

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். வீண்செலவுகள் ஏற்படும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று. அதிருப்திக்கு ஆளாக நேரிடும்.

**இடபம்:** மனதில் தேவையற்ற சின்னச் சின்னக் குழப்பங்கள் தோன்றி மறையும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**மிதுனம்:** உற்சாகமாக இருப்பீர்கள். மனதில் சாதிக்கவேண்டும் என்ற எண்ணம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சு வார்த்தை

**சிம்மம்:** செயல்கள் அனைத்தையும் சிந்தித்து செயற்படவேண்டிய நாள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அனுசரித்துச் செல்வது நல்லது. வீண்செலவுகளால் கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும்.

**கன்னி:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விற்பனையும் லாபமும் குறைவாகவே இருக்கும்.

**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். முக்கியமான முடிவு எடுப்பதில் அவசரம் வேண்டாம். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. நண்பர்கள் பணம் கேட்டு வருவார்கள்.

**விருச்சிகம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. விற்பனையும் லாபமும் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். காரியங்கள் இழுபறியாகும். செலவுகளை சமாளிக்க நேரிடும்.

**கும்பம்:** பணவரவு அதிகரிக்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படும். பாதிப்பு எதுவும் இருக்காது.

**மீனம்:** அனுகூலமான நாள் .தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். சிவபெருமானை வழிபடுவது நன்று.

# கவிதை நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.4

ஜெயசீலனின் 'யாழ் மீட்டும் காற்று', 'பிறகு கதைக்கிறேன்' ஆகிய கவிதை நூல்களின் வெளியீடு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் வேல் நந்தகுமார் தலைமையில் பருத்தித்துறையிலுள்ள சூரியமஹாலில் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு றடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச கலைஞர் சங்கத் தலைவர் பொன். சுகந்தன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-45)

# உலக அஞ்சல் தின விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.4

பருத்தித்துறை அஞ்சலகம் நடத்தும் வடமராட்சிக்குட்பட்ட அரச திணைக்களங்களுக்கிடையிலான உலக அஞ்சல் தின விளையாட்டு நிகழ்வு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை அஞ்சலகம் பதில் அஞ்சலதிபர் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கு.செந்தில்குமார் பிரதம விருந்தினராகவும், வட மாகாண இறைவரித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் பு.பரமேஸ்வரன், பருத்தித்துறை தலைமைப் பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க, ஓய்வுநிலை அஞ்சலதிபர் அ.அருளானந்தசோதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பழைய புராணமும் பழைய பல்லவிகளும்

ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்ற பின்னர் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு இன்று வருகை தரவுள்ளார். இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் இந்தியாவுக்கு உவப்பானதாக இருக்கவில்லை. அவர்கள் பல வழிகளில் முயன்றும் தாம் விரும்பிய தரப்பை அல்லது தமக்குத் தேவையான தரப்பை ஆட்சிபீடம் ஏற்றமுடியவில்லை. ஆனாலும், இலங்கையின் புதிய ஆட்சியாளர்கள் தமக்கு விரோதமாகச் சென்றுவிடக் கூடாது என்பதில் அக்கறையாக இருக்கின்றார்கள்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில், தேசிய மக்கள் சக்திக்கு எதிராக ஏனைய சக்திகளை ஒருங்கிணைக்கும் கைங்கரியத்தையும் இந்தியா முன்னெடுத்திருந்தது. அதில் காத்திரமான வெற்றியை அதனால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. முக்கியமாக தெற்கில், ரணில் மற்றும் சஜித் தரப்பை ஒன்றிணைக்கும் முயற்சியை ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மீண்டும் முன்னெடுத்திருந்தாலும் அது 'சாண் ஏற முழம் சறுக்கிய'கதையாக தோல்வியடைந்திருக்கின்றது. தமிழ்த் தரப்பிலும் பிரிந்து நிற்கும் தேசியக் கட்சிகளை ஓரணியாக்கும் முயற்சிகளை இந்தியா முன்னெடுத்தது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் இருவரை அழைத்து கடும்தொனியிலும் இந்தியா அறிவுறுத்தியிருந்தது. அதன் பின்னர் கொழும்பில் இந்தியத் தூதுவர், தமிழ்த் தேசியக் கட்சிகளை அழைத்து பேசியும் பார்த்தார். ஆனால் 'ஒற்றுமை' என்பது மருந்துக்கும் இல்லாமல் உள்ளது. இவ்வாறானதொரு நிலையிலேயே இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு வருகை தருகின்றார். அவர் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்துப்பேச்சு நடத்தவுள்ளார். இதன்போது புளித்துப்போன, ஒற்றுமைக் கதையையும், 13ஆம் திருத்தத்தின் நடைமுறையாக்கம் பற்றியுமே பேசப்போகின்றார் என்பது தெளிவு. அதைத்தாண்டி அவர் இம்முறை, இந்தியாவின் நிறுவனங்களுக்கு வடக்கு -கிழக்கில் வழங்கப்பட்ட முதலீட்டுத் திட்டங்களை பாதுகாப்பதற்கான உத்தரவாதத்தையும் தமிழ்க் கட்சிகளிடமிருந்து பெற முயலக்கூடும். அதைவிட வடக்கு - கிழக்கில் அபிவிருத்தியின் பெயரால் சீனா காலூன்றாமல் தடுப்பதற்கும் தமிழ்க் கட்சிகளை அவர் தயார்படுத்தக்கூடும். அதைவிட, தமிழ்த் தரப்புகள் ஒற்றுமையாக வலியுறுத்தினால் தான் தங்களால் எதையும் செய்ய முடியும் என்றும் சொல்லக்கூடும்.

ஆனால் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சரிடம் எதைக்கேட்கப்போகின்றோம் என்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் கூடி ஆலோசிக்கப் போவதில்லை. இந்திய வெளிவிவகார அமைச்சர் முன்பாக இருந்து ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு கோணத்தில்தான் விடயங்களை முன்வைக்கப் போகின்றன. இந்திய வெளிவிவகார அமைச்சரின் வழமையான புராணத்தால் தமிழர்களுக்கு எந்த நன்மையுமில்லை என்பதை எடுத்துச் சொல்வதற்கோ, அல்லது இந்தியாவின் அணுகுமுறையில் மாற்றம் தேவை என்பதை எடுத்துரைப்பதற்கோ இந்தச் சந்திப்பை தமிழ்க் கட்சிகள் பயன்படுத்தப் போவதில்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தம் எழுதப்பட்ட 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில், கொழும்பின் ஆட்சிப்பீடம் டில்லிக்கு வேண்டப்பட்டதாக இருக்கவில்லை. அதனால் தமிழர் தரப்புகளை கருவியாகப் பயன்படுத்தி கொழும்பு ஆட்சிப் பீடத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நகர்வை இந்தியா முன்னெடுத்தது. இப்போதும் அதை வேறு வடிவில் செய்வதற்கு இந்தியா முயலக் கூடும். தமிழ்த் தரப்புகள், மீண்டும் இந்தியாவின் தேவையை நிறைவேற்றும் கருவியாக இருக்காமல், இனியாவது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் களமாக அதைப் பயன்படுத்த வேண்டும்.




பல்கலைக்கழகங்களின்

## கருத்துச்சுதந்திர வெளியை நசுக்குவது கோழைத்தனம்

யாழ். பல்கலை ஆசிரியர் சங்கம் கண்டனம்

**யாழ்ப்பாணம், ஒக்.4**

**ஆரோக்கியமான விவாதங்களுக்கும், கருத்துப் பரிமாறல்களுக்குமான களமாக விளங்கும் பல்கலைக்கழகங்களின் கருத்துச் சுதந்திரத்துக்கான வெளியை உறுதிப்படுத்தவேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கருத்துச் சுதந்திரம் கல்விச் சுதந்திரத்தின் ஒரு பகுதியாகும். பல்கலைக்கழக சமூகத்தினை சேர்ந்தவர்கள் கருத்துகளை கருத்துகளால் எதிர்கொள்ளவல்ல அறிவு முதிர்ச்சியைக் கொண்டிருப்பர். அண்மையில் 15 பல்கலைக்கழக ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றுக்கு எதிராக யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் ஒட்டப்பட்ட அநாமதேய சுவரொட்டி உள்ளிட்ட சில சம்பவங்கள் கருத்து சுதந்திரத்துக்கான வெளியை இல்லாதொழிக்கும் வகையில் அமைகின்றன.

இவ்வாறான கோழைத்தனமான செயற்பாடுகள் வன்மையாகக் கண்டிக்கப்படத்தக்கது. இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டவர்களை இனங்கண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றுள்ளது. (ச-27)

## இறப்பர் என்ற போர்வையில் சீனாவுக்கு பித்தளை ஏற்றுமதி

கொழும்பு, ஒக். 4

இறப்பர் என்ற போர்வையில் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருந்த 8 ஆயிரத்து 440 கிலோ பித்தளை சுங்கப் புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கிராண்ட்பாஸிலுள்ள சுங்கக் களஞ்சியத்தில் 12 ஆயிரம் கிலோ இறப்பர் என்ற பெயரில் இந்தப் பித்தளை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. இதன் பெறுமதி 25 மில்லியன் ரூபா. இதற்குரிய வரி 12.5 மில்லியன் ரூபா என சுங்கப்புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-6)

## இ.போ.ச.வுக்கு புதியதலைவர்

கொழும்பு, ஒக்.4

இலங்கைப் போக்குவரத்து சபையின் புதிய தலைவராக முன்னாள் தலைவர் ரமால் சிறிவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். ரமால் சிறிவர்த்தன இலங்கைப் போக்குவரத்துச் சபை தலைவராக இரண்டாவது தடவை போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் விஜித ஹேரத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-சி)

## மதுபானவரி கிடுக்குப்பிடி

கொழும்பு, ஒக்.4

பெருந்தொகையானவரியைச்செலுத்தாத மதுபானசாலை உரிமையாளர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளதாக இலங்கை மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. நிலுவைத் தொகையை எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும். நிலுவைத் தொகையை செலுத்தத் தவறிய மதுபான ஆலைகளுக்கு இனி அனுமதி இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஓய்வூதியம் இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக்.4

இலங்கை மத்திய வங்கி ஆளுநர்களின் ஓய்வூதியத்தை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடை நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் என்ற வகையில் கலாநிதி நந்தலால் வீரசிங்க இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இந்தத் தீர்மானம் எதிர்வரும் நவம்பர் 09 ஆம் திகதிவரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

05.10.2024

சனிக்கிழமை - புரட்டாதி - 19

சுபநேரம் : 03.02- 04.32

ராகுகாலம் : 09.02 - 10.32

**நாளொரு நல்வார்த்தை**

**செல்வம் என்பது வருமானத்தைப் பொறுத்ததல்ல; நிர்வாகத்தைப் பொறுத்தது.**

- மாண்டெயின்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக ஆவணப்படத் திரையிடல்

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்கள் பல்கலைக்கழக நூலகக் கேட்போர்கூடத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2மணிக்கு திரையிடப்படவுள்ளன.

தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டு வன்னிப் பகுதியில் குடியேறிய மலையக மக்களின் வரலாற்றுப் பின்புலம் மற்றும் வாழ்வியல் பற்றிய பதிவான 'பதியம்', யாழ்ப்பாணத்தில் தெரு நாய்களின் அதிகரிப்புத் தொடர்பான பிரச்சினைகளை வெளிக்கொணரும் 'ஆர்க் ஏஞ்சல்ஸ்', மன்னார் மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் வாழும் மீனவர்களிடையே மருவிச் செல்லும் நாட்டார் பாடல்களை ஆவணப்படுத்தும் 'அம்பா', பருத்தித்துறைத் துறைமுகத்தின் மீள் கட்டுமானம் பற்றிய மக்களின் கருத்துக்களைப் பதிவு செய்யும் 'பருத்திமுகம், தமிழரின் பாரம்பரியமான பறையின் எழுச்சி பற்றிச் சிலாகிக்கும் 'பறையால் பறை', மலையகத்தின் கிறேட்வெஸ்டன் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் அத்தியாவசியத் தேவையான கழிவறைப் பிரச்சினையையும் அதனை அமைத்து கொடுப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தும் 'கழிவறை', மன்னார்ப் பிரதேசத்துக்கு வருகைதரும் வலசைப் பறவைகள் பற்றி ஆவணப்படுத்தும் 'பிளமிங்கோ, அநுராதபுரம் அல்லவெவ கிராமத்தில் காடுகளோடு ஒன்றிவாழும் மக்களின் வாழ்வாதாரமான காட்டுத் தேன் சேகரித்தலை வெளிப்படுத்தும் 'கோல்டன் ஜங்கிள், கிளிநொச்சி மாவட்டத்தின் சிவநகர் பாடசாலையில் கபடிப் போட்டியில் தேசியரீதியிலான சாதனைகளைப் படைக்கும் பெண் மாணவிகளைப் பற்றிப் பேசும் 'கபடி', காலத்தின் வடுக்களை கடந்து வாழ்ந்து வரும் முன்னாள் போராளி ஒருவரின் வாழ்வியலைப் பதிவுசெய்யும் 'சமர்' ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்படவுள்ளன. (ரி-20-66)





# விவசாயக் கண்காட்சி இன்றுடன் நிறைவு!

**யாழ்ப்பாணம், ஒக். 4**

**வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில், 'சூழல் நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி,' எனும் தொனிப்பொருளிலான விவசாயக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

இன்று வெள்ளிக்கிழமை வரை இடம்பெற உள்ள குறித்த கண்காட்சியை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது இயற்கை விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறுதானியங்கள், பயிர் உற்பத்திகள் உள்ளிட்ட பல்வேறு வகையான விவசாய செயல்முறைகள் காட்சிப்படுத்தப்பட்டன. இதில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் விவசாய நிறுவனங்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் உரையாற்றுகையில், விவசாயத்தை காலநிலைக்கு ஏற்ப கொண்டு செல்வதுடன் விவசாய உற்பத்திகளை விற்பனை செய்கின்றபோது இடைத்தரகர்களின் தலையீட்டைக் கட்டுப்படுத்தி விவசாயிகளுக்கு உற்பத்திக்கேற்ப இலாபம் கிடைப்பதற்கு வழிவகை செய்ய முயற்சி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார். (ச-20)



## 'கனலி' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஏற்பாட்டில் 'கனலி' மாணவர் சஞ்சிகையின் ஐந்தாவது இதழ் வெளியீட்டு நிகழ்வு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர்கூடத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஊடகக் கற்கைகள் துறைத்தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகப் பொன்விழா நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இடம்பெறவுள்ள சஞ்சிகை வெளியீட்டில் மாணவர்களுக்கான வாழ்த்துரையினை ஊடகக் கற்கைகள் துறைவிரிவுரையாளர் அனுதர்ஷி கபிலனும், சஞ்சிகைக்கான கருத்துரைகளை தமிழ்த் துறை விரிவுரையாளர் த. அஜந்தகுமார், சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகம் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (ரி)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 4

'சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலில் மக்களின் வாக்களிப்பு முறை' எனும் தலைப்பில் அவையம் படிப்பு வட்டம் மக்களிடையே நிலவும் சமகால அரசியல் சிந்தனைகள் பற்றிய உரையாடல் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் இணைச் செயலாளர் சி.சிவகஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 'அவையம்' படிப்பு வட்டத்தில் அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர். கே.ரி கணேசலிங்கம், வருகை விரிவுரையாளரும் ஓய்வுபெற்ற நிர்வாக சேவை அதிகாரியான செல்வின் ஆகியோர் கருத்துகளை முன்வைத்தனர். (ரி)





## 'தர்ம முழக்கம்' இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.4

கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரி மற்றும் கிளி. முழங்காவில் மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு இடையிலான 7 ஆவது 'தர்மமுழக்கம்' துடுப்பாட்ட சமர் தருமபுரம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி இ.கந்தசாமி தலைமையில் தருமபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை மற்றும் நாளை சனிக்கிழமை ஆகிய இரண்டு நாள்களில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதல் 6 போட்டிகளில் தருமபுரம் மத்திய கல்லூரி 4 போட்டிகளில் வெற்றி பெற்றிருப்பதுடன் முழங்காவில் மகா வித்தியாலயம் ஒரு போட்டியில் வெற்றி பெற்றுள்ளது. ஒரு போட்டி சமநிலையில் நிறைவடைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி-159-18)

## தைக்குண்டோ போட்டியில் அனந்தினிக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம், ஒக். 4

மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தரப் பெண்கள் பாடசாலையின் மாணவி ச. அனந்தினி தேசிய மட்டத்தில் இரத்தினபுரியில் இடம்பெற்ற ஆகக்கூடிய எடையான (73 கிலோவுக்கு மேல் ) 18 - 20 வயதுப் பிரிவின் கீழ் கராத்தே தைக்குண்டோ போட்டியில் பாடசாலை வரலாற்றில் முதல் தடவை பங்குபற்றி வெண்கலப் பதக்கத்தை தனதாக்கியுள்ளார்.

இவரை பாடசாலை சமூகம் நினைவு கேடயம் வழங்கி கௌரவித்தது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலைக்கஞ்சி வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக்.4

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஏழாலை லெனின் முன்பள்ளிச் சிறுவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு உடுவில் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் ஏற்பாட்டில் மேற்படி முன்பள்ளியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ச-25,66)



## நடமாடும் சேவை!

யாழ்ப்பாணம், ஒக். 4

சிறுவர் தினத்தை முன்னிட்டு இதுவரை பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்யாத சிறுவர்களுக்கான நடமாடும் சேவை பதில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நடமாடும் சேவையில் 41 சிறுவர்களுக்கான காலங் கடந்த பிறப்புப் பதிவு, 5 பேருக்கான உத்தேச வயதுப்பத்திரம், 11 பேருக்கான பிறப்புச் சான்றிதழ் திருத்தம், 3 பேருக்கான இறப்புப் பதிவு என 60 பயனாளிகள் பங்குபற்றிப் பயனடைந்தனர். (ச-22,66,9)



## சிறுவர்தின நிகழ்வு

கொடிகாமம் ஒக்.4

சாவகச்சேரி புவேந்தன் முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வு நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் உத்தியோகத்தர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ரி-159)



கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 9'ஏ' மற்றும் 8ஏபி ஆகிய முதன்மைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டனர். (ச-25, 13)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்





நீர்வேலி வாய்க்காற் தரவைப் பிள்ளையார் தேவஸ்தான
**ஜெயந்தி நாதகுருக்களின்**
செல்வப்புதல்வன்
**சந்திரசேகரசர்மா (மயூ)**
இன்று (04.10.2024) வெள்ளிக்கிழமை நடைபெறும் கொழும்பு பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில்
**BMICH இல் BCS பட்டத்தினை பெறுகின்றார்.**
அவரை அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
அவர் மேன் மேலும் பல பட்டங்களைபெற விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்: மாமன்மார்
குடும்பத்தினர்
(நல்லூர்)
(பன்றிக்கோட்டு பிள்ளையார் கோவிலடி)

(cs 56362)(N-1)

அமரர் முருகேசு தனபாலன் அவர்களின்
**அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் பிற்போடப்பட்டுள்ளது**



அன்னாரின் மூத்த சகோதரனான
முருகேசு சிவபாலன் அவர்கள்
நேற்று (03.10.2024)
வியாழக்கிழமை காலமானதால்,
**06.10.2024 (ஞாயிறு) அன்று நடைபெற இருந்த மேற்படி கிரியைகளும் மதிய போசனமும் பிற்போடப்பட்டுள்ளது**
என்பதனை அறியத் தருகின்றோம்.
**குடும்பத்தினர்.**
இல.7, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு: 04.09.1944
இறப்பு: 03.10.2024

எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்

**திருமதி மா.விஜயநந்தினி**

அவர்களின் அன்பு மாமியார்

**மகேஸ்வரி விசுவலிங்கம்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
ஊழியர் நலன்புரி சங்கம்
யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயம்
தென்னைப் பயிர்ச்செய்கை சபை
பளை - கிளிநொச்சி

(cr.43336) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 04 . 1952



மறைவு 02 . 10 . 2024

## யசோதராதேவி சபாமணி

"அழகுநிலா" அல்வாய் மனோகராவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யசோதராதேவி சபாமணி நேற்றுமுன்தினம் (02.10.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - அழகம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சபாமணியின் அன்பு மனைவியும், வசந்தராதேவி, ரவிரதன், ரவிரதா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற வனிதாமணி அருந்துரை மற்றும் ஜெயக்கொடி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, வேல்மணி மற்றும் தயாமணி ஆகியோரின் மைத்துனியும், கௌதமன் (டென்மார்க்), கௌதினி, செல்வேந்திரா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தினி (டென்மார்க்), கஜேந்திரன், ஜனனி ஆகியோரின் மாமியாரும், ஐந்தவி (டென்மார்க்), யாதவி (டென்மார்க்), அகிரன் (டென்மார்க்), நந்துசன், ஹேஹனுசன், திபிக்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்கு வேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: **கணவர் - 077 610 5326**
**மகள் - 077 378 1003**
**மகன் (டென்மார்க்) - + 4525 781484**

தகவல்:
**குடும்பத்தினர்**

(cs 52557 (N.1)




# வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ். அஹதியா பாடசாலை மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நிகழ்வானது யாழ். மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் விளைவுகள் பற்றிய தெளிவூட்டல்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

(ச-25,27)

# ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.4

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தின் ஏற்பாட்டில் கட்டுரை, சிறுகதை, கவிதை, சித்திரப்போட்டிகள் என்பன பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என இரு பிரிவுகளின் கீழ் நடத்தப்படவுள்ளன.

இதற்காக அனுப்பப்படும் ஆக்கங்கள் 'மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்துவதன் ஊடாக மாற்றுத்திறனாளிகளின் வாழ்வை ஆரோக்கியப்படுத்துதல்' எனும் கருப் பொருளில் அமைத்தல் வேண்டும். உங்களது சொந்த ஆக்கங்களாகவும் இந்தப்போட்டிக்காக எழுதப்பட்ட அல்லது வரையப்பட்ட புதிய ஆக்கங்களாகவும், ஊடகங்களில் வெளிவராத ஆக்கங்களாகவும் இருத்தல்வேண்டும். ஒருவர் ஒரு ஆக்கத்தினை மட்டுமே அனுப்ப முடியும். ஆக்கங்களை ஏ4 தாளில் கணினியில் தட்டச்சு செய்தோ அல்லது தெளிவான கையெழுத்தினால் எழுதியோ அனுப்பலாம்.

போட்டியாளர்கள் ஆக்கத்துடன் தங்களது முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த ஆண்டு, மாதம், திகதி என்பனவற்றினையும், பாடசாலை மாணவர்களாயின் மேலதிகமாக பாடசாலையின் பெயர், தரம் என்பனவற்றினையும் உள்ளடக்கிய சுயவிவரப் படிவத்தினையும் இணைத்து கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம், இல.290, பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 31 அம் திகதிக்கு முன்பு அனுப்புதல் வேண்டும். பாடசாலை மாணவர்களாயின் 300-350 சொற்கள் கொண்டதாகவும் பொதுமக்களாயின் 450-500 சொற்கள் கொண்டதாகவும் கட்டுரை, சிறுகதைகளை அமைத்தல் வேண்டும். பாடசாலை மாணவர்களாயின் 30 வரிகள் பொது மக்களாயின் 40 வரிகளைக் கொண்டதாக கவிதையை அமைத்தல் வேண்டும். சித்திரத்தினை ஏ4 தாளில் வரைதல் வேண்டும். ஒவ்வொரு போட்டியிலும் 3 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர். வெற்றியாளர்களுக்கான பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள் ஆகியன கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் நடத்தவுள்ள சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வின் போது வழங்கிவைக்கப்படும். போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0212054224, 0765515755, 0717100371 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும்.

(ச-25-66)


# காணி விற்பனைக்கு

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் பருத்தித்துறை வீதியிலிருந்து **100m** தூரத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**02 பரப்பாகவும்**
**1 1/2 பரப்பாகவும்**
**01 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப் படும்.**

(CS 1522) A-1

**077 836 3050 / 075 889 5625**


# கேள்வி அறிவித்தல்
## மேலதிக முத்திரை தீர்வை
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)

1. வலிகாமம் வடக்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை - கொல்லன்கலட்டி. (தொலைபேசி இல: 021-2241130, தொலை நகல் 021-2243688)** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.10.04 – 2024.10.18 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணி வரையில் சமர்ப்பித்து ரூ.3000.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2024.10.21 ஆம் திகதி 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள் அவைகள் மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக் கேள்வியாளரகளின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக் கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6 இல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பி.ப 2.30 மணிக்கு 2024.10.11 அன்று நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுடியாகும் | | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01 | NP/14/41(14)/05/01/366/PSDG(SD)-03/2024 | வீதி புனரமைத்தல் போயிட்டி மாரீசன் வீதி - இளவாலை வட மேற்கு | 4.096 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 22.12.2024 | 41,000.00 | Till 19.01.2025 |

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத் தொகை (VAT மற்றும் வேறு வரிகள் நீங்கலாக) 50 மில்லியனினுள் இருப்பின. பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொது நிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)**
**04.10.2024**

(cr.43337) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறான முடிவு சிறுவன் இறப்பு

ஒன்லைன் விளையாட்டுக்களுக்கு அடிமையான சிறுவன் ஒருவன் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணப்பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.திறன்பேசியைப் பெற்றோர் பறித்து வைத்ததையடுத்து, அந்தச் சிறுவன் மனமுடைந்து காணப்பட்டான் என்றும், இதையடுத்தே தவறான முடிவெடுத்து உயிரிழந்தான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-100)



## மணமகள் தேவை

1. யாழ்ப்பாணம் றோமன் கந்தோலிக்கம் குருகுலம். 1989 மூலம் Master Degree, Engineer, UK Citizen. மணமகனுக்கு மணமகள் தேவை.
2. வடலியடைப்பு - மாவிட்டபுரம். இந்து கௌரவகுலம் (V). 1990. விசாகம். BSc, MBA Consultant மணமகனுக்கு மணமகள் தேவை.
3. யாழ்ப்பாணம் Town - கொக்குவில். இந்து கௌரவகுலம் (V) 1988, அனுஷம். MBBS (Jaffna) Doctor மணமகனுக்கு மணமகள் தேவை.
4. கொக்குவில் - கந்தர்மடம். இந்து கௌரவகுலம் (V) 1992, புனர்பூசம். Bachelors of Computer System Engineering, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
5. காரைநகர். இந்து கௌரவ குலம் (V). 1986, சித்திரை BSc Information and Communication Technology, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
6. கோப்பாய் - சுன்னாகம். இந்து கௌரவகுலம் 1988 பூரட்டாதி. MBA, Financial Analyst Canada. Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
7. சண்டிலிப்பாய் - தெல்லிப்பளை. இந்து கௌரவகுலம் (V) 1989 அனுஷம் B.S and Post Graduate, Human Resource Analyst, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
8. கரவெட்டி. இந்து கௌரவகுலம் (V) 1986 திருவோணம். BA (Hons) Accounting and Finance, CIMA, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
9. அச்சுவேலி. இந்து கௌரவகுலம் (V) 1990 சமயம். Software Engineer, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P. 077 539 3728
www.thaalee.com whatsap: 077 803 8193
(cs.56365)(N-1)


## மரண அறிவித்தல்



### திருமதி தனலட்சுமி சுந்தரலிங்கம்

தாவளை, வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி சுந்தரலிங்கம் நேற்று (03.04.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை - மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மகளும், காரைநகர் வலந்தலையை சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை) அவர்களின் பாசமிகு மனைவியும், தனரஞ்சன், சுந்தரவதனி (ஆசிரியர், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நந்தினி, சிவராசன் (எழுதுநர், இலங்கை புகையிரதத் திணைக்களம், திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், தபசாகரி (மாணவி, திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்), ரேணுசாகரி (மாணவி, மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற விவேகானந்தராசா மற்றும் வள்ளிநாயகி, இராஜகுலேந்திரன், கணேசராசா, அருணகிரிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2024) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாவளை, வட்டுக்கிழக்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.
தொலைபேசி:077 154 7026

(CR 43339) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 01 . 1951



மறைவு 01 . 10 . 2024

### சறோஜினிதேவி சிவநாதன்

யாழ். குப்பிளானைப் பிறப்பிடமாகவும், காரைநகர், கொக்குவில் கிழக்கு, கொழும்பு, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சறோஜினிதேவி சிவநாதன் கடந்த 01.10.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்மநாதன் - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற பேரம்மாவின் (குஞ்சியம்மா) பெறாமகளும், சிதம்பரபிள்ளை சிவநாதனின் (சுவிஸ்), அன்பு மனைவியும், சிவரஞ்சன், சிவதர்ஷன், சிவதர்ஷினி, காலஞ்சென்ற சிவமதன் ஆகியோரின் அன்புத் தாயும், லலிதா, சங்கீர்தா, ஜெயரூபன் ஆகியோரின் பாசமிகு மாமியும், சஹானா, சர்வின், சாஷ்வின், முருகுசுவாமி, தத்வமயன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், சயோனின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களான சிவநேசன், சிவலிங்கம் மற்றும் நடராஜா (கனடா), சுத்தானந்தன் (கனடா), விவேகானந்தன் (கனடா), சர்வானந்தன் (Srilanka), காலஞ்சென்ற விஜயலக்ஷ்மி, சிவபாதம் (கனடா), செல்வநாயகம் (Swiss), சிவராஜா (கனடா), சோமசுந்தரம் (Swiss) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சொர்ணநாயகி, திலகவதி (கனடா), காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சாந்தா (கனடா), வசந்தி (கனடா), சுசிலாதேவி (Srilanka), கைலைநாதன் (கனடா), வசந்தி (கனடா), சுமதி (கனடா), றதனி (Swiss), ஜெயந்தி (கனடா), சுகந்தி (Swiss) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், ராஜதுரை, அருட்பிரகாசம், சிவயோகம், சிவலோகநாதன் ஆகியோரின் மைத்துனியும், சிவசோதி (Srilanka), சிவலிங்கம் (Srilanka), காலஞ்சென்ற ஜீவமணி ஆகியோரின் அண்ணியும், சிவரூபி, சிவறஜீவன், சிவரூபன், சிவரமணன், சிவகங்கா, கேசவன், ஆதவன், சுகன்யன், உமேஷ், சிவனுஜா, சுனித்தா, சயந்தன், சிந்துஜா, சரன்யா, சிவமிதுறா, சதுஷன், சந்துஜன், சானுஜன், அனோஜன், அபீரா, சுகந்தன், சுஜீவன், சோபிகா, சோபனா, லோகராணி, தனலக்சுமி, யோகமலர், கலைச்செல்வன், அருட்செல்வன், அன்புச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமியும், கோபிதா, சாய்பவன், சிவகலா ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.10.2024) சனிக்கிழமை 8911 Woodbine Ave, Marknam, ON L3R 5G1, கனடாவில் பார்வைக்கு வைக்கப்பட்டு அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவரஞ்சன் – 647 331 4110
சிவதர்ஷன் – 416 720 4057
சிவதர்ஷினி – 647 208 0334

தகவல்:
குடும்பத்தினர்

(cs.56358) (N-1)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 11 . 09 . 1943



உதிர்வு 27 . 09 . 2022

### அமரர் மூத்ததம்பி கனகலிங்கம்

திதி:பூர்வபக்க துதியை (04.10.2024)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகி போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்...

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(GS 15211) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஒக்.4
கல்வி அபிவிருத்திக் குழுமம் நடத்தும் முன்பள்ளித்துறைசார் விழிப்புணர்வுக் கருத்தரங்கும், "21ஆம் நூற்றாண்டு முன்பள்ளிச் செல்நெறிகள்" எனும் நூல் வெளியீடும் கல்வி அபிவிருத்திக் குழுமத் தலைவர் ம.சூரியசேகரம் தலைமையில் இருபாலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.10 வரைக்கும் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.பிரட்லி ஜெனட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-45)




நெடுந்தீவு பிரதேச பெண்களுக்கு சிறுகைத்தொழில் அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் தோற்பைகள் உருவாக்குதல் மற்றும் அலங்காரமிடும் பயிற்சி பிரதேசசெயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-45-9)

### மக்கள் எதிர்ப்பையடுத்து

# மன்னார் மதுபானசாலை தற்காலிகமாக மூடப்பட்டது

**மன்னார், ஒக்.4**
**தலைமன்னார் பிரதான வீதி, எழுத்தூர் சந்திக்கு அருகாமையில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையை தற்காலிகமாக உடன் மூடுமாறு மதுவரித் திணைக்கள ஆணையாளர் எழுத்து மூலம் உத்தரவிட்டுள்ளார்.**




மக்கள் குடியேற்றம் நிறைந்த பகுதியில் குறித்த மதுபானசாலை அமைக்கப்பட்டுள்ளது என எதிர்ப்புத் தெரிவித்து மதுபானசாலைக்கு முன்பாக கடந்த திங்கட்கிழமை பெருமளவு மக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது சம்பவ இடத்துக்கு வருகை தந்த மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் மற்றும் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் ஆகியோர் மக்களுடன் கலந்துரையாடிய பின்னர் மக்கள் போராட்டத்தைக் கைவிட்டு சென்றனர். இந்தநிலையில் மாவட்டச்செயலர் குறித்த பிரச்சினையை மதுவரித் திணைக்கள எத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்று குறித்த மதுபானசாலையைத் தற்காலிகமாக மூடுமாறு பணித்துள்ளார். அத்துடன் மதுபானசாலையை நிரந்தரமாகமூடுவது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,56)



காரைநகர்ப் பிரதேச செயலகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் சிறுவர் தின நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் யாழ்.காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர்ப் பிரதேச செயலாளர் ரஞ்சனா நவரத்தினம் கலந்து கொண்டார். (ச-25,66)



## ரஷ்யத் தூதுவருடன் ஜனாதிபதி சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4
இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவன் எஸ். ஜகார்யன் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சந்திப்பில் புதிதாகத் தெரிவான ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு தூதுவர் எஸ். ஜகார்யன் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் தனிப்பட்ட வாழ்த்துச் செய்தியொன்றையும் வழங்கினார்.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நீண்ட கால இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடலில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. மேலும் இராஜதந்திர உறவுகளை பரஸ்பரம் மேம்படுத்துவதற்கு இருதரப்பினதும் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதுடன், வர்த்தகம், முதலீடு, கலாசாரம் மற்றும் கல்வி போன்ற முக்கியமான துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இரு தரப்பினரும் வலியுறுத்தினர். (ச-சி)



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் கல்விக் கண்காட்சி பாடசாலை அதிபர் சி.சிவநாவலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் பிரதம விருந்தினராகவும் கல்வி அபிவிருத்திப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். (ச-555)





சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வித்தியாலய சமூகத்தினரால் மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்குவேலி...


பணத்தைக் கொள்ளையடித்துச் சென்ற குற்றச்சாட்டில் மூன்று சந்தேகநபர்களை மானிப்பாய்ப் பொலிஸார் நேற்று வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.

சங்குவேலிப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் வெளிநாட்டில் வசித்து வந்த நிலையில் அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார். அவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தனது காணியை விற்ற பணத்துடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை மோட்டார்சைக்கிள் ஒன்றில் பின்தொடர்ந்து வந்தவர்கள் அவரை வீதியில் வழிமறித்துத் தாக்கிவிட்டு அவர் கொண்டு சென்ற பணம், கடவுச்சீட்டு, பெறுமதியான கையடக்கத் தொலைபேசி என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். பணத்தைப் பறிகொடுத்தவர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதனடிப்படையில் சந்தேகநபர்கள் ஊரெழுப் பகுதியில் மறைந்திருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மூவரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம், கையடக்கத் தொலைபேசி, கடவுச்சீட்டு என்பவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரையும் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார் விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காணி விற்பனைக்கு இடைத்தரகராகச் செயற்பட்டவர், அவருடைய மகன், மகனின் நண்பன் ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

(அ-ம-66-26-20)



## விசுவமடுவில்...

பேருந்து - மோட்டார்சைக்கிள் என்பன மோதி விபத்துக்குள்ளானதிலேயே இந்த இறப்புச் சம்பவித்துள்ளது. இராசேந்திரம் கௌதமன் (வயது - 43) என்பவரே உயிரிழந்தவராவார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-19-316)

## உள்ளூராட்சித்...

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"2023 ஆம் ஆண்டு உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமைகள் மீதான மனுக்கள் சம்பந்தமாக கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதேபோல், கடந்த ஜூலை மாதம் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் அதுவரையில் இடம்பெற்று வந்ததன் காரணமாக ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தது.

ஜனாதிபதித் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, நாடாளுமன்றத்தைக் கலைக்கும், நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாள் குறிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார். ஆகையால், நாட்டின் சட்டவாக்கத்துறைக்கு பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் நோக்கத்துக்கு முன்னுரிமையளித்து செயலாற்றுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேரிட்டுள்ளது.

அதேபோல், ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு காலப்பகுதியினுள் தீர்மானிக்கப்பட்டவாறு நாடாளுமன்றத் தேர்தலுக்கு இடைப்பட்ட காலத்தினுள் அதாவது ஒக்ரோபர் 26 ஆம் திகதி எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலை நடத்துவதற்கும் நேரிட்டுள்ளது.

இலங்கை மக்களின் ஜனநாயக ரீதியான உரிமைகளைக் காப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு அதன் செயற்பொறுப்பைச் சிறந்த முறையில் புரிந்துகொண்டு செயலாற்றுவதுடன், உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுடன் இசைந்து சட்டத்தால் விதித்துரைக்கப்பட்டுள்ள தேர்தல்களை நடத்தும் செயற்பொறுப்பையும் கவனத்திலெடுத்து நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் ஆணைக்குழு இயன்றளவு விரைவாக உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலை நடத்துவதற்கு நாள் குறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்" - என்றுள்ளது. (அ-ஒ-26)

## இந்திய...

முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துமீறிய மீன்பிடிக்காகக் கைதுசெய்யப்பட்டுள்ள 150க்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இரண்டாம், மூன்றாம் தடவைகள் அத்துமீறிய சில மீனவர்களுக்கு நீண்டகால சிறைத்தண்டனைகளும் விதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையிலேயே, பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு தமிழக மீனவர்களின் குடும்பத்தினரால் நேற்று உணவுத் தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இன்று இலங்கைக்கு வருகைதந்து ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகிய தரப்பினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ள நிலையில், தமிழகத்தில் மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளமையானது முக்கியத்துவம் மிக்கதான விடயமாகவும் பார்க்கப்படுகின்றது.

தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி, இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-56)

## ஊழல்...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்துள்ள ஊழல் ஒழிப்புச் செயற்றிட்டங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை தனது பாராட்டைத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியும், இணைப்பாளருமான மார்க் அந்ரே, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை நேற்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போதே, அவர் ஜனாதிபதியின் வெற்றிக்கும் அவருடைய செயற்றிட்டங்களுக்கும் வாழ்த்தைத் தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலருடைய வாழ்த்துச் செய்தியையும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி, ஜனாதிபதி அநுரவிடம் ஒப்படைத்தார்.

மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகளவில் காணப்படுவதால் எதிர்வரும் காலம் சவாலானதாக அமையுமென சுட்டிக்காட்டிய ஐ.நா. இணைப்பாளர் சர்வதேச நாணயநிதியத்துடனான இலங்கையின் வேலைத்திட்டம் மற்றும் வறுமை ஒழிப்பு முயற்சிகளுக்கு ஐ.நா. ஒத்துழைப்பு வழங்குமெனவும் உறுதியளித்தார்.

ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழல் ஒழிப்புத் திட்டத்துக்குப் பாராட்டுத் தெரிவித்த மார்க் அந்ரே, அந்த முயற்சிகளுக்கு ஐ.நா. தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்குமெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோல் சமூகத்தில் தேசிய சமாதானத்துக்கான புதிய அரசாங்கத்தின் பூர்வாங்க முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்த வதிவிட இணைப்பாளர், ஒவ்வொரு தரப்பினருக்கு மத்தியிலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதியின் அர்ப்பணிப்பையும் வரவேற்பதாகத் தெரிவித்துள்ளார்.

(அ-ம)

## வெளிநாட்டு...

கடற்படைப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே அந்தப் பெண் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து ஏராளமான வெளிநாட்டு சிகரெட்களும் மீட்கப்பட் டுள்ளன. அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-56)

## மேற்குலகத்தின்...

"தேசியவாத முகாமை இல்லாதொழிப்பதற்கான சூழ்ச்சி தேசிய மற்றும் சர்வதேச சக்திகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புலிகள் அமைப்புக்கு மஹிந்தராஜபக்சதான் முடிவுகட்டினார். ஆனால் தலிபான்களை ஒழித்துக்கட்ட முடியாமல் நேட்டோ அமைப்பு இன்னமும் திணறுகின்றது.

1987 ஆம் ஆண்டின்போது இடம்பெற்ற வடமராட்சி சமர் மேலும் மூன்று நாட்களுக்கு நீடித்திருந்தால் அன்றே பிரபாகரனைப் பிடித்து, புலிகளை ஒழித்திருக்கலாம். ஆனால் இந்தியா வந்து பருப்புப் போட்டு, அன்றைய ஜனாதிபதியை மிரட்டி போரை நிறுத்தியது.

2009 ஆம் ஆண்டு போர் இறுதிக்கட்டத்தை நெருங்கிய தறுவாயிலும் பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். போரை நிறுத்துமாறு அழுத்தம் கொடுத்தனர். மேற்குலகம் வந்து விமானத்தில் தன்னை அழைத்துச் செல்லும் எனப் பிரபாகரன் இறுதிக் கட்டம்வரை நம்பினார். மஹிந்த ராஜபக்ச சர்வதேசத்தின் கோரிக்கையை ஏற்கவில்லை. அதனால்தான் மஹிந்தவை சர்வதேசம் பகைத்துக் கொண்டுள்ளது. ஜெனிவாவிலும் தீர்மானங்கள் வரத்தொடங்கின. போலியாக போர்க்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன" - என்றார்.

(அ-ம-44)

## ஏப்ரல்...

அண்மைய விலைக்குறைப்பு நடவடிக்கை தற்போதைய விலைச்சூத்திரத்துக்கு அமையவே செய்யப்பட்டது என்றும் எதிர்வரும் காலங்களில் மேலும் வினைத்திறனான முறையில் விலைச்சூத்திரத்தை அமுல்படுத்தலாம் எனவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-ம-6)

## கிராம...

பூர்த்தியாகாத நிலையில் அவருக்குத் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த இடமாற்றத்தை இரத்துச் செய்யக்கோரி அப்பகுதி மக்கள் பிரதேச செயலாளரைச் சந்தித்து முறைப்பாடு செய்திருந்தனர். எனினும், மக்களின் கோரிக்கைக்குப் பிரதேச செயலாளரால் உரிய தீர்வு வழங்கப்படாத நிலையில் மக்கள் இணைந்து தீர்வுகோரி நேற்றையதினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ-ம-66)

## வேட்பு...

இன்றுமுதல் ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி நண்பகல்வரை வேட்பு மனுக்களைத் தாக்கல்செய்யமுடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. வேட்புமனுத் தாக்கல்செய்ய வரும்போதும், தாக்கல் செய்த பின்னரும் தேர்தல் சட்ட திட்டங்களுக்கமைய செயற்படுமாறு அனைத்துத் தரப்பினரிடமும் தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச ஊழியர்களுக்கு நாம் பக்கபலமாவோம்

ஜனாதிபதி தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.4**

**வினைத்திறன்மிக்க மக்கள்நல அரச சேவையை உருவாக்க தம்மை அர்ப்பணிக்கும் அரச ஊழியர்களுக்காக தாம் துணை நிற்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இதன்போது அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச சேவையில் இதுவரை காலம் இடம்பெற்று வந்த அரசியல் பழிவாங்கல், இடமாற்றம், அரச சேவையில் பதவி உயர்வு வழங்காமை போன்ற செயற்பாடுகள் தமது அரசாங்கத்தின் கீழ் இடம்பெறாது. மக்களைத் திருப்திப்ப டுத்தும் வினைத்திறன்மிக்க அரச சேவையை உருவாக்குவதற்கு அரச உத்தியோகத்தர்கள் செயற் படவேண்டும். எதிர்வரும் நாற்பது நாள்கள் நிலைமாற்ற காலமாகும். அந்த காலப் பகுதியில் அரச சேவையை வீழ்ச்சி யடையாமல் பேணுவதற்கு அரச உத்தியோகத்தர் பாடுபடவேண்டும் - என்றார். (ச-சி)

# கைதான நண்பனுக்கு கசிப்புக் கொண்டு சென்றவரும் கைது

**கிளிநொச்சி, ஒக். 4**

பிடியாணையில் கைது செய்யப்பட்ட நண்பனை பார்க்கச் சென்றவர் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதயநகரைச் சேர்ந்த இளைஞனை, கிளிநொச்சி நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணைக்கு அமைவாகப் பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

அவரைப் பார்ப்பதற்காக பரந்தனிலிருந்து 19 வயதுடைய இளைஞர்கள் குளிர்பான போத்தலில் குளிர்பானத்துடன் கசிப்பும் கலந்துகொண்டு சென்று, கைது செய்யப்பட்ட நண்பனுக்கு வழங்க முற்பட்டுள்ளனர்.

இதன்போது கடமையில் இருந்த பொலிஸ் பரிசோதகர் அதனைப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது குளிர் பானப் போத்தலிலிருந்து கசிப்பு துர்நாற்றம் வீசியுள்ளது.

இதனையடுத்து கசிப்புக் கொண்டு வந்தவர் கைது செய்யப்பட்டு ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-113)



# உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு புதிய செயலர்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வால் உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு என்பவற்றின் புதிய செயலாளராக எஸ்.ஆலோக பண்டார நியமிக்கப்பட்டுள் ளார்.

அவருக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க வால் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

(ச-இ)



# மருத்துவ உபகரணங்கள் போதனாவுக்கு கையளிப்பு

யாழ். போதனா மருத்துவமனைக்கு சுக்சி குறூப் கம்பனியால் நான்கு மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலையில் நடைபெற்ற நிகழ்வின் போது, கண் சத்திரசிகிச்சை பிரிவுக்கு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

(ஒ-20)

வேலைவாய்ப்புகள்
சாரதி, கிளீனர், கிளாக், விற்பனையாளர், உதவியாளர், பாதுகாப்பு உத்தியோகத்தர், லேபர், சமையலாளர், வெயிட்டர், ஸ்டோர் கீப்பர், வெல்டர், காப்பென்டர்.
076 531 8147, 076 098 4532
(cs.1513) (N-1)

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
A/L தொழில்நுட்பப் பிரிவு
புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2026
• திகதி : 05.10.2024 சனிக்கிழமை
• நேரம் : காலை 8.30
தொடர்புகளுக்கு:
077 017 5346
(CR 43338) A-1

வேலையாட்கள் தேவை
யாழ். நகரை அண்டிய பகுதியில் பூமாலை கட்டத் தெரிந்த ஆண், பெண் தேவை.
T.P: 074 11 60 584

NEC- யாழ் நகர்
பெருமாள் கோவில் அருகில்
கலை வர்த்தகம்
A/L 2026
புதிய பிரிவுகள் ஆரம்பம்
05.10.2024 சனி காலை 8 மணி
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
அலுவலக தொடர்பு: 076 535 0999

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி யாழ்ப்பாணம்
கலை வர்த்தகம்
A/L 2026
ஆரம்பம் 05.10.2024 சனி காலை 8.00 மணி
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
அலுவலக தொடர்பு: 077 469 6695

பாராட்டி வாழ்த்துகின்றோம்
Best Wishes



கௌரிபால குருக்கள் மஞ்சுஸ்ரீ தம்பதியரின் செல்வப் புதல்வன்
ஸ்ரீ பாரத்வாஜ சர்மா
இன்று (04.10.2024) வெள்ளிக்கிழமை நடைபெறும் கொழும்பு பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் Batchelor of Science (Honours) in Software Engineering பிரிவில் முதலாம் தரத்தில் சித்தியடைந்து பட்டம் பெறுகின்றார். அவரை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம். அவர் மேன்மேலும் பல பட்டங்களைப் பெற விநாயகரைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றோம்.
வாழ்த்துவோர்
அப்பா, அம்மா, அண்ணா, அண்ணி
077 969 7230
(CS/29018) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org